**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 327/2018**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 08.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | திருஞானம் |
| பெயர்: | தமிழ்செல்வி (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வழுதலைக்குடி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 60/2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை : 08.12.2023.**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

16.09.2001–தேதியிட்ட ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 21.04.2018–தேதியிட்ட 2–ம் பிரதிவாதி எனது கணவர் மீது சீர்காழி காவல்நிலையத்தில் கொடுத்த உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 04.05.2018–தேதியிட்ட நாகப்பட்டினம் நில அபகரிப்பு பிரிவு அழைப்பாணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 06.09.2018–தேதியிட்ட எனது கணவர்

பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மற்றும் புகார் ஏற்பு ரசீதின் உண்மை நகலை தாக்கல செய்கிறேன். **அது வா.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 11.09.2018–தேதியிட்ட சீர்காழி சார்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 21.09.2018–தேதியிட்ட எனது கணவர் சீர்காழி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் புகார் ஏற்பு ரசீதின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2ம் பிரதிவாதி எனது கணவர் மீது நாகப்பட்டினம் நில அபகரிப்பு பிரிவில் கொடுத்த புகார் மற்றும் விசாரணை அறிக்கை முடிவின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 18.12.2018–தேதியிட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் பொதுதகவல் அறிக்கையின் ஆணையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8–ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.